## 1. வாசனைப் பயிர்களுக்கான உர அட்டவணை

**ஏலக்காய்**

எக்டருக்கு 25 கிலோ மக்கிய கம்போஸ்ட் இட்டு மண்ணுடன் நன்கு கலக்கச்செய்யவேண்டும். எக்டருக்கு 75 கிலோ தழைச்சத்து. 75 கிலோ மணிச்சத்து, 150 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இருசம பகுதிகளாகப் பிரித்து ஜூன் - ஜூலை மாதங்களில் ஒரு முறையும், பின்பு அக்டோபர் - நவம்பர் மாதங்களில் ஒரு முறையும் இடவேண்டும்.

**இலவங்கம்**

| எரு மற்றும் உரங்கள் | முதலாம் ஆண்டு | வருடா வருடம் அதிகரிப்பு | 10ம் வருடத்திலிருந்து |
|---|---|---|---|
| தொழுவுரம் (கிலோ) | - | 2 | 20 |
| தழை (கிராம்) | 20 | 20 | 200 |
| மணி (கிராம்) | 18 | 18 | 180 |
| சாம்பல் (கிராம்) | 25 | 25 | 250 |

**கிராம்பு**

ஒரு வயதான, இளஞ்செடிகளுக்கு, செடி ஒன்றிற்கு 15 கிலோ மக்கிய தொழு எரு, தழைசத்து 20 கிராம், மணிச்சத்து 20 கிராம், சாம்பல் சத்து 60 கிராம் கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, ஒரு பகுதியை ஜூன் - ஜூலை மாதத்திலும், மற்றொரு பகுதியை செப்டம்பர் - அக்டோபர் மாதத்திலும் இடவேண்டும். பின்னர் சிறிது சிறிதாக உர அளவுகளை அதிகரித்து 7 வயதான மரத்திற்கு மரம் ஒன்றிற்கு தொழு எரு 50 கிலோ, தழைச்சத்து 300 கிராம், மணிச்சத்து 300 கிராம் மற்றும் சாம்பல் சத்து 960 கிராம் கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை இடவேண்டும். உரம் இட்ட ஒரு மாதம் கழித்து, 50 கிராம் அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியா இடவேண்டும்.

**கொத்தமல்லி**

**அடியுரம்:** எக்டருக்கு 10 கிலோ தொழு உரம் கடைசி உழவின் போது இடவேண்டும். விதைப்பதற்கு முன் இறவை மற்றம் மானாவாரிப் பயிர்களுக்கு 10 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும்.

**மேலுரம்:** இறவைப் பயிருக்கு மட்டும் விதைத்த 30வது நாள் எக்டருக்கு 10 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய உரத்தை அளிக்கவேண்டும்.

**சோம்பு**

**அடியுரம்:** எக்டருக்கு 10 டன் தொழு உரம், 25 கிலோ தழைச்சத்து மற்றும் 10 கிலோ மணிச்சத்து.

**மேலுரம்:** பூக்கும் பொழுது எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய உரத்தை அளிக்கவேண்டும்.

**வெந்தயம்**

அடியுரம்: எக்டருக்கு 25 கிலோ தொழு உரத்தை கடைசி உழவின் போது இடவேண்டும். மேலும் 30 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 40 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய உரங்களை இடவேண்டும்.

மேலுரம்: விதைத்த 30 நாட்கள் கழித்து மேலுரமாக எக்டருக்கு 20 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரத்தை இடவேண்டும்.

**இஞ்சி**

அடியுரம்: எக்டருக்கு 40 டன் தொழு உரத்துடன், 50 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும்.
மேலுரம்: நட்ட 45 மற்றும் 90ம் நாட்களில் 37.5 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய உரத்தை மேலுரமாக இடவேண்டும்.

**ஜாதிக்காய்**

முதல் வருடத்தில் மரம் ஒன்றிற்கு தொழு எரு 15 கிலோ, தழைச்சத்து 20 கிராம், மணிச்சத்து 20 கிராம் மற்றும் சாம்பல் சத்து 60 கிராம் கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை இடவேண்டும். வளர்ந்த மரங்களுக்கு தொழு உரம் 50 கிலோ, தழைச்சத்து

300 கிராம், மணிச்சத்து 300 கிராம், சாம்பல்சத்து 960 கிராம் கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும். உரம் இட்ட ஒரு மாதம் கழித்து மரம் ஒன்றிற்கு 50 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியம் நுண்ணுயிர் உரங்களை இடவேண்டும்.

**பஜ்ஜி மிளகாய்**

மக்கிய தொழு உரம் ஒரு எக்டருக்கு 20-25 டன் 60,100 மற்றும் 60 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக் கொண்ட உரத்தினை அடிஉரமாக இடவேண்டும். நடவு செய்த மூன்றாவது வாரத்தில் 20 கிலோ தழைச்சத்து மற்றும் 20 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும். மேலும் நடவு செய்த ஆறுவாரங்களில் தழைச்சத்து, 40 கிலோ மற்றும் மணிச்சத்து 40 கிலோ இடவேண்டும்.

**மிளகு**

ஒரு கொடிக்கு 10 கிலோ மக்கிய தொடு எருவுடன் 100 கிராம் தழைச்சத்து, 40 கிராம் மணிச்சத்து மற்றும் 140 கிராம் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை இருபாகங்களாகப் பிரித்து மே - ஜூன் மற்றும் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் இடவேண்டும். உரங்களைக் கொடியிலிருந்து 30 செ.மீ தூரம் தள்ளி இடவேண்டும். இராசயன உரங்கள் நட்ட ஒரு மாதம் கழித்து கொடி ஒன்றிற்கு 100 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் 25 கிராம் மெக்னீசியம் சல்பேட் இடவேண்டும்.

**மஞ்சள்**

அடியுரமாக எக்டருக்கு கீழ்க்கண்ட உரங்களைப் பார்களின் பக்கவாட்டில் நடவுக்கு முன் இடவேண்டும். மக்கிய தொழு உரம் 10 டன்கள் (கடைசி உழவிற்குப் பின்) அல்லது வேப்பம்புண்ணாக்கு அல்லது கடலைப் புண்ணாக்கு 200 கிலோ, தழைச்சத்து 25 கிலோ, மணிச்சத்து 60 கிலோ, சாம்பல் சத்து 18 கிலோ கொடுக்கக்கூடிய இராசயன உரங்கள், 30 கிலோ பெரஸ் சல்பேட், 15 கிலோ துத்தநாக சல்பேட் இடவேண்டும். விதைத்த ஒரு மாதம் கழித்து அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியா 10 கிலோ இடவேண்டும்.

மேலுரம் : மஞ்சள் நட்ட 30,60,90 மற்றும் 120ஆம் நாட்களில் ஒவ்வொரு முறையும் தழைச்சத்து 25 கிலோ, மணிச்சத் 25 கிலோ மற்றும் சாம்பல் சத்து 18 கிலோ கொடுக்கக்கூடிய இராசயன் உரங்களை இடவேண்டும்.

நுண்ணூட்டச்சத்து இடுதல் : போரான், இரும்பு மற்றும் துத்தநாக குறைபாட்டினை தவிர்க்க நுண்ணூட்டச் சத்து கலவையை இலை வழி ஊட்டமாக கிழங்குகள் தண்ணீரில் பிடிக்கும் தருணத்தில் தெளிக்கவேண்டும். சூப்பர் பாஸ்பேட் 15 கிலோவை 25 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு நாள் இரவு ஊறவைக்கவேண்டும். மறுநாள் காலை தெளித்த நீரை எடுத்து அதில் கீழ்க்கண்ட உப்புகளைச் சேர்த்து 250 லிட்டர் தண்ணீர் ஊற்றி, இலைகளின் மேல் தெளிக்கவேண்டும்.

| | |
|---|---|
| இரும்பு சல்பேட் | 375 கிராம் |
| துத்தநாக சல்பேட் | 375 கிராம் |
| போராக்ஸ் | 375 கிராம் |
| யூரியா | 375 கிராம் |

**வனிலா**

மட்கிய நில மூடாக்கு வனிலாவின் முக்கிய சத்து பொருள் ஆதாரமாகும். ஒரு கொடுக்கு ஒரு வருடத்திற்கு 40 - 60 கிராம் தழைச்சத்து, 20 - 30 கிராம் மணிச்சத்து மற்றும் 60 - 100 கிராம் சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை இரண்டு அல்லது மூன்று பாகங்களாகப் பிரித்து இடவேண்டும். மாத இடைவெளியில் 17:17:17 தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக் கலவையை தெளிக்க வேண்டும்.